முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

O.S. No.277/2018 and OS.279/2018 தேதி 03.01.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி -2 (பால்ராஜ், த/பெ, மாயவன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. எனக்கு எழுதப்படிக்கத் தெரியும், நான் பொறியியல் பட்டதாரியாவேன். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும், பரமசிவம் மற்றும் பாலு வழக்கு தாக்கல் செய்துள்ளனர். என் தகப்பனார் பெயர் மாயவன், அவரது கையொப்பம் எனக்கு தெரியும். இந்த 2 வழக்குகளிலும் என்ன சொத்து சம்மந்தப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும் 2 வழக்குகளிலும் நத்தம் புறம்போக்கு பற்றிய வழக்கு. மாசிலாமணி என் பெரியப்பா. என்னிடம் காட்டப்படும் OS.277/2018ன் வா.த.சா.ஆ.1 என் தகப்பனார் மற்றும் பெரியப்பா பெயர்கள் உள்ளன ஆனால் அவர்கள் தான் எழுதிக்கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. OS.277/2018ன் வா.த.சா.ஆ.2 என் தகப்பனார் எழுதிக்கொடுத்த ஆவணம். அதில் என் பெரியப்பா மாசிலாமணி மற்றும் என் சித்தப்பா ஏழுமலையும் கையொப்பம் போட்டுள்ளார். கையொப்பம் போட்டுள்ளார்.
2. OS.277/2018 வழக்கில் உள்ள சொத்து புறம்போக்கு சொத்து, அதில் கட்டிமுடிக்கப்படாத ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டை வாதிகள் கட்டிமுடிக்கும்போது நாங்கள் தடுத்துவிட்டோம் என்றால் சரிதான். கூடுதலான இடத்தில் கட்டியதால் தடுத்துவிட்டோம். நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. OS.279/2018 வழக்கில் உள்ள சொத்து பட்டா சொத்து என்றால் சரிதான். அதை நாங்கள் காலி செய்ய வேண்டும என்று தான் அவர்கள் வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள் என்றால் சரிதான். OS.279/2018 வழக்கு சொத்திற்கு பக்கத்தில் நாங்கள் குடியிருக்கிறோம். தானே புயலில் என் வீடு இடிந்துவிட்டது என்றால் சரியல்ல. OS.279/2018 வழக்கு சொத்தில் சுமார் 12, 13 வருடங்களாக குடியிருக்கிறோம் என்றால் அதற்கு மேலாக அங்குதான் இருக்கிறோம். தாவா சொத்தை எனது அப்பாவும் அவரது சகோதரர்களும் கிரையம் செய்துகொடுத்துவிட்டு தற்போது இல்லை என்று மறுத்து தவறாக கட்சிசெய்கிறோம் என்றால் சரியல்ல.

3. OS.279/2018 வழக்கு சொத்திற்கு பக்கத்தில் உள்ள வீட்டிற்கு வரிவிதிப்பு மற்றும் மின்இணைப்பு உள்ளது. தற்போது நான் குடியிருக்கும் வீட்டிற்கும் மின் இணைப்பு மற்றும் வரிவிதிப்பு உள்ளது. தானே புயலில் நான் குடியிருந்த வீடு இடிந்து விழுந்துவிட்டதால் OS.279/2018 வழக்கு சொத்தில் நான் அனுமதி பெற்று குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. அந்த வீட்டை காலிசெய்யக்கூடாது என்று தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.